வருகிறார்களோ, அது போல், கிளை நிலையங்களைத் துவங்கி, நல்ல முறையில் கிராம மக்களுக்கு, கால் நடைகளுக்கு மருத்துவ உதவி கிடைக்க வேண்டுமென்ற காரணத்தால் அதை மீண்டும் திறக்க பரிசீலனை செய்வார்களா என்பதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்பதோடு நடமாடும் கால் நடை மருந்தகங்கள் ஒவ்வொரு இடத்திலும் செயல்பட்டு வந்தது, கடந்த கால ஆட்சியில் அது கொஞ்சம் தடை பட்டுள்ளது. அதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அதையும் மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம் ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைக் கருத்திற் கொண்டு இது பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 158. திரு. எஸ். டேனியல்ராஜ். மாண்புமிகு மீனவளத்துறை அமைச்சர்.

158—

மீனவர்களுக்குச் சலுகைகள்.

4361 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு மீனவளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடல்புற பகுதி மீனவர்களுக்கு வழங்கும் சலுகைகள் ஆறு, குளம், ஏரிப்பகுதியில் வசிக்கும் மீனவர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ், கடல்புற மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கும் பொருந்தும், கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண திட்டம், இலவச வீடுகட்டும் திட்டம் ஆகியவைகளை உள்நாட்டு மீனவர்களுக்கு விரிவுபடுத்தப்படவில்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்புறத்தில் வாழ்கின்ற மீனவர்களும், உள்நாட்டு மீனவர்களும் ஒரே இடத்தில் சேர்ந்திருக்கின்ற காரணத்தால், கடற்புறத்திலே வாழுகின்ற மீனவர்கள் இலவச வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு மீனவர்களையும் சேர்ப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1992 மார்ச் 10]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்புற மீனவர்கள் இயற்கைச் சீற்றத்திற்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர். உள்நாட்டு மீனவர்கள் கடற்புற மீனவர்களை விட பாதுகாப்பான இடங்களில் வசிக்கின்றனர். இருப்பினும், நிதி நிலைமை சீரடைந்தவுடன் உள்நாட்டு மீனவர்களும் இச்சலுகையைப் பெறக்கூடிய வகையில் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (†) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் குறிப்புகள்.

(அ) வினா நேரம் முடிவுற்றவுடன் பிரச்சினைகளை எழுப்பும் முறை குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என் கவனத்திற்கு எதுவுமே கொண்டு வராமல் இப்போது சொல்வதற்கு எந்த விதியிலும் இடம் இல்லை. என்னிடத்திலே ஏதாவது அனுமதி பெற்றிருக்க வேண்டும். அல்லது என் கவனத்திற்கு ஏதாவது எழுதிக் கொடுத்து இருக்க வேண்டும். இப்போது அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) இப்போது அனுமதி இல்லை தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) என் கவனத்திற்கு நீங்கள் எதுவும் கொண்டு வரவில்லை. நான் இப்போது இதை அனுமதிக்கவில்லை என்கிறபோது என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு). என் கவனத்திற்கு கொண்டுவரவில்லை. எனவே. நான் வேறு பிரச்சினைகளை எடுக்க வேண்டும்.

முற்பகல் 10-50

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் வேறு பிரச்சினைகளை எடுக்கவேண்டும். (குறுக்கீடு) திரு திருநாவுக்கரசு நீங்கள் என்கவனத்திற்கு எதுவும் கொண்டுவராமல் திடீரென்று எழுந்தால் நான் என்ன செய்ய முடியும்? நான் இப்போது வேறு பிரச்சினைகளை எடுக்கவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் என் கவனத்திற்கு